மாலை முரசு

பக்கங்கள் 18+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | தை 22 வியாழக்கிழமை 05.02.2026 | அதிர்வு 188

## இம்மாத இறுதியில் அநுர இந்தியாவுக்குப் பயணம்



ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்த மாதம் இறுதியில் இந்தியாவுக்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## புதுடில்லி பறந்த ரில்வின் குழுவினர்

இந்திய கலாசார உறவுகள் கவுன்சிலின் அழைப்பின் பேரில் ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட குழுவினர் இன்று காலை புதுடில்லிக்குப் புறப்பட்டனர். 02

# கறுப்புக்கொடிப் போராட்டக்காரர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுங்கள்

### அநுர அரசிடம் சுதந்திரக் கட்சி வலியுறுத்து; படையினர் அவமதிப்பு என்றும் குற்றச்சாட்டு

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினத்தன்று வடக்கு, கிழக்கில் கறுப்புக் கொடி ஏந்தி அரசுக்கும் அரசமைப்புக்கும் எதிராகச் செயற்பட்ட நபர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க வலியுறுத்தினார்.

இன்று வியாழக்கிழமை கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் 02






# கிளிநொச்சி பாடசாலையில் குளவிகள் கொட்டி 39 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி!

கிளிநொச்சியில் பாடசாலை ஒன்றில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் குளவிக்கூடு கலைந்து மாணவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இதனால் பாதிப்படைந்த 39 மாணவர்களும், ஆசிரியர்கள் சிலரும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை சேர்க்கப்பட்டுள்ளனர். இருப்பினும் எவருக்கும் 02

## இம்மாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவுள்ளார். புதுடில்லியில் நடைபெறவுள்ள உச்சிமாநாடு ஒன்றில் கலந்துகொள் வதற்காகவே ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விடயத்தை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிஷினி கொலன்னே உறுதிப்படுத்தியுள்ளார்.

## கறுப்புக்கொடிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுதந்திர தின அணிவகுப்பின் போது இராணுவப் படைப் பிரிவுகளை முறையாக அறிமுகப்படுத்தும் மரபு இம்முறை மீறப் பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாரிய உயிர்த் தியாகத்தால் ஈட்டப்பட்ட யுத்த வெற்றியையும் இராணுவத்தின் கௌரவத்தையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சிறுமைப்படுத்துகின்றார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

"ஜனாதிபதி அருகில் கடந்து செல்லும் போது ஒவ்வொரு இராணுவப் பிரிவின் விசித்திரங்கள் மற்றும் சாதனைகள் வழக்கமாகச் சொல்லப்படும். ஆனால் இம்முறை அத்தகைய கௌரவம் வழங்கப்படாமல் "டித்வா" சூறாவளி பற்றி மட்டுமே பேசப்பட்டது." – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

யுத்த காலத்தின் போது தலைமை தாங்கிய இராணுவத் தளபதிகள் முன்னிலையிலேயே இந்தச் செயல் இடம் பெற்றுள்ளது என்றும் அவர் கடுமையாக விமர்சித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், "ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் செய்தியையோ அல்லது அவர்களது தேவைகளையோ நிறைவேற்றுகின்றாரோ என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது.

இனங்களுக்கிடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்தும் விடயங்களை முன்வைக்க வேண்டாம் எனப் புலம்பெயர் தமிழ் அமைப்புகளிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

இந்த அரசு யாருடையதோ ஒரு தனிப்பட்ட தேவைக்காகச் செயற்படுகின்றது." – என்றார்.

கல்வித்துறை சீர்திருத்தங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த துமிந்த திஸாநாயக்க, "6ஆம் தர பாடப் புத்தகங்களில் குளறுபடிகள் இருப்பதை ஜனாதிபதியே ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், அதற்காகக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.ஐ.டி. வரை செல்வது தேவையற்றது.

கல்விப் புலத்தில் தவறு செய்தவர்களை நேரடியாக அழைத்து விசாரணை நடத்த முடியும். அரச அதிகாரிகள் கர்வத்துடன் செயற்படக்கூடாது. அவ்வாறான போக்கைக் கடைப்பிடித்தால் ஒருநாள் அவர்கள் தனிமைப்படுத்தப்பட நேரிடும்." – என்றார்.

அதேவேளை, கணக்காய்வாளர் நாயகம் நியமிக்கப்பட்டமையை வரவேற்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

## புதுடில்லி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லியை அடுத்து குஜராத் மற்றும் கேரள மாநிலங்களுக்கும் அவர்கள் விஜயம் செய்யவுள்ளனர். அந்த மாநிலங்களின் முதலமைச்சர்களுடனும் அவர்கள் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

இந்தியாவில் விவசாயம், தொழில் துறை மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு தொடர்பான மையங்களை அவர்கள் பார்வையிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த விஜயத்தில் ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவுடன் நிறுவனங்களுக்கு இடையேயான ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி ஜனக, நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், கிட்ணன் செல்வராஜ், ஜே.வி.பியின் ஊடகப் பிரிவு உறுப்பினர் ஹேமதிலக கமகே மற்றும் ஜே.வி.பியின் சர்வதேசக் குழு உறுப்பினர் சட்டத்தரணி கல்பனா மதுபாஷினி ஆகியோர் இணைந்துள்ளனர்.



## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வித ஆபத்தான நிலைமை ஏற்படவில்லை என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் வரை கல்வி கற்கும் அந்தப் பாடசாலையில் காணப்பட்ட பெரிய குளவிக்கூடு ஒன்று கலைந்துள்ளது.

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான பயிற்சிகளுக்கு மாணவர்கள் தயாராகிக் கொண்டிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர் தலைவர்கள் ஆகியோர் ஏனைய மாணவர்களைப் பாதுகாப்பாக பாடசாலை வளாகத்தை விட்டு வெளியேற்றியுள்ளனர்.

ஆசிரியர்கள் சிலரும் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். அதேவேளை, சிரேஷ்ட மாணவர் தலைவனுக்கு ஏனைய மாணவர்களை விட அதிக குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து மாணவர்கள் அனைவரும் கிளிநொச்சி றோட்ரிக்கோ மைதானத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அம்புலன்ஸில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### பலாலி தனியார் காணிகளில்

# விவசாயம் செய்வதற்கு இராணுவம் நடவடிக்கை

## ஏராளமான பனைகள் வெட்டிச் சரிப்பு

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள காணிகளில் விவசாயம் செய்வதற்காக இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக ஏராளமான பனைகள் இராணுவத்தால் அழிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்ததாவது:-



“வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட பகுதிகளில் 15 கிராம அலுவலர் பிரிவுகள் முற்றாக விடுவிக்கப்பட வேண்டும். ஆனால், அந்தப் பகுதிகளில் இராணுவத்தினர் தோட்டங்களைச் செய்து வருகின்றனர். பலாலி விமான நிலையத்துக்கு மேற்குப் பக்கமாக உள்ள பகுதிகளில் உள்ள காணிகளில் பெருமளவு பனைகள் இன்று அழிக்கப்பட்டுள்ளன. அந்தக் காணிகளில் விவசாயம் செய்வதற்காகவே, இராணுவத்தினர் அவற்றை அழித்துள்ளனர்.

பொதுமக்கள் தமது காணிகளில் உள்ள பனை மரங்களை அனுமதியின்றி தறித்தால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் பனை அபிவிருத்திச் சபையினர் இராணுவத்தின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி தைப்பொங்கல் நிகழ்வுக்கு யாழ்ப்பாணம் வருகைதந்த போது காணிகள் விடுவிக்கப்படும், வீதிகள் திறக்கப்படும் என தமிழ் மக்கள் நம்பிக்கையுடன் காத்திருந்தார்கள். ஆனால், ஏமாற்றமே எஞ்சியது.

மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என உயர் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில், கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற நீதிமன்ற விசாரணையில், காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும், வரைபடம் தயாரிக்கும் பணிகள் இடம்பெறுகின்றன எனவும் அரச தரப்பால் கூறப்பட்டது. ஆனால், அதற்கு முற்றிலும் முரணான வகையிலேயே இராணுவம் செயற்பட்டு வருகின்றது.” – என்றார்.

# பிரபாகரன் வீட்டில் ‘கட்டுமானம்’ கண்காணிக்கின்றது அரசாங்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் வீட்டை புனரமைப்பது தொடர்பில் அண்மைக் காலமாக இடம்பெறும் கருத்தாடல்களைக் கண்காணிப்பதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் வீட்டில் நூலகம் அல்லது பொதுவான கட்டுமானம் ஒன்றை அமைப்பதற்கு அவருடைய சகோதரி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். இதற்காக வல்வெட்டித்துறை நகர சபையில் அனுமதிகோரி விண்ணம் செய்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் நளிந்தவிடம் ஊடகவியலாளர்கள் வினவியுள்ளனர்.



இதன்போதே, “பிரபாகரனின் வீட்டை புனரமைப்பது தொடர்பில் முன்னெடுக்கப்படும் நகர்வுகளை கண்காணிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. எனினும், இதுவரை அவ்வாறு எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை.” – என்று அமைச்சர் நளிந்த தெரிவித்துள்ளார்.



# வவுனியாவில் 'சுமைதாங்கி' நாடக நூல் வெளியீட்டு விழா

வவுனியா கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் நாடகசிரோன்மணி கந்தையா ஸ்ரீகந்தவேள் எழுதிய ஐந்து சமூக நாடகங்களைத் தாங்கி வரும் "சுமைதாங்கி" நூலின் வெளியீட்டு விழா வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 09.30 மணியளவில் தமிழறிஞர், தமிழ்மணி அகளங்கன் நா.தர்மராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.கமலதாசன் முதன்மை அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த விழாவில் படைப்பிலக்கியத் துறையில் "கலைக்குருசில்" விருது பெற்ற கலாபூசணம் நா.தியாகராசா, கலாபூசணம் முனைவர் மேழிக்குமரன் மற்றும் கலாபூசணம் விருது பெற்ற கலைஞர்கள் பாராட்டிக் கௌரவிக்கப் படவுள்ளனர்.






**நமது கருத்து**

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அதிகரிக்கும் தற்கொலைகள்

தங்கள் வாழ்க்கையை தாங்களே முற்கொண்டு முடித்துக் கொள்வோரின் - அதாவது தற்கொலை செய்து கொள்வோரின் - எண்ணிக்கை உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருகையில், அது இலங்கையிலும் குறிப்பிட்ட தக்க அளவில் உயர்ந்து இருப்பதான வேதனை மிக்க தகவல் வெளியாகி உள்ளது.

தற்கொலை செய்வோரின் வீதம் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை இப்போது நாலாவது இடத்தில் உள்ளது எனப் பெயரிடப்படுகிறது.

புள்ளி விவரங்களின்படி உலகளாவிய ரீதியில் தற்கொலை செய்து கொள்வோரின் வீதம் சராசரியாக ஒரு லட்சம் பேரில் 11 ஆக உள்ள போதிலும் இலங்கையில் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை சராசரியாக ஒரு லட்சம் பேரில் 28.8 ஆக உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

1996 ஆம் ஆண்டில், ஒரு லட்சம் பேருக்கு 47 என தற்கொலைகளின் அடிப்படையில் உலகில் இரண்டாவது இடத்தில் இலங்கை இருந்தது. அது இப்போது கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது என ஆறுதல் கூறப்படுகின்றது.

எனினும், இலங்கையில் தினமும் சுமார் 8 தற்கொலைகள் பதிவாகின்றன என்று தேசிய மனநல நிறுவனத்தின் மனநல மருத்துவர் சஜீவன அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதே சமயம் யாழ்ப்பாணத்திலும் தற்கொலை புரிவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தற்கொலைக்கு முயன்று சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 2025 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டவர்களில் 170 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு 2023 ஆம் ஆண்டு 60 பேரும், 2024 ஆம் ஆண்டில் 76 பேரும் மட்டுமே இவ்வாறு தற்கொலைக்கு முயன்றவர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளனர்.

இதேநேரம் 2021 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டுகளில் தற்கொலைக்கு முயன்று யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறியவர்களின் எண்ணிக்கை 2,996 எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரச் சிக்கல்கள், மன உளைச்சல்கள், போதைப் பொருள் பாவனை, மது பாவனைக்கு அடிமையாதல் போன்ற பல காரணிகள் தற்கொலைக்கு தூண்டும் அடிப்படைகளாக இருந்து வருகின்றமை கவனிக்கத்தக்க விடயமாகும். இந்தச் சிக்கல்களை சமுதாயத்தில் முழுமையாகக் களைந்து, ஒரு ஆரோக்கியமான சூழலை உருவாக்க முழு நாடாக நாம் போராட வேண்டியுள்ளது.



# மட்டக்களப்பு சித்தாண்டியில் டெங்கு சிவப்பு எச்சரிக்கை!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி பொது சுகாதார பிரிவுக்கு உட்பட்ட சித்தாண்டி கிராமத்தில் டெங்கு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ளப்பெருக்கால் இந்தப் பகுதிகளிலுள்ள கிராமங்கள் வெள்ளதில் மூழ்கியிருந்தன. இந்த நிலையில் சித்தாண்டி -2, சித்தாண்டி -3, சித்தாண்டி -4 ஆகிய பகுதியில் என்றுமில்லாதவாறு டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகாரித்துக் காணப்படுகிறது.

இதன் காரணமாக பலர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் என்று அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொது சுகாதார உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சித்தாண்டி 2 ஆம், 3 ஆம், 4 ஆம் பிரிவு ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் தொடர்ச்சியாக டெங்கு நுளம்பின் தாக்கத்தால் நோயாளர்கள் பதிவாகி வருகின்ற நிலையில் இதுவரை 64 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். சிலர் வெளியேறிய நிலையில் இன்னும் பலர் வைத்திய சாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு செவ்வாய்க்கிழமை பொது சுகாதர பரிசோதகர்களால் விசேட கள ஆய்வு நடவடிக்கைகள் சித்தாண்டி பகுதியில் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பிரிவுக்கு உட்பட்ட 14 பொது சுகாதார பிரிவுகளிலும் உள்ள பொது சுகாதார கள உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டு சித்தாண்டி பகுதி அனைத்து பிரிவுகளிலும் உள்ள வீடுகளுக்கு சென்று டெங்கு தொடர்பான இடங்களைக் கண்டறிந்தனர். அதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் டெங்கு அபாயம் உள்ள இடங்களை கண்டறிந்து வீட்டின் உரிமையாளர்களுக்கு சட்ட நடவடிக்கை தொடர்பான முறைப்பாடுகளையும் பதிவு செய்தனர்.

குறித்த விசேட நடவடிக்கையில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய பொது சுகாதார பணிமை அதிகாரிகள், செங்கலடி பொது சுகாதார பணிமை பொது சுகாதார வைத்தியர் மற்றும் செங்கலடி பிரதேச சபையின் தவிசாளர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நடவடிக்கையை மேற்கொண்டதில் 794 வீடுகள் டெங்கு தொடர்பில் ஆராயப்பட்டு 113 வீடுகளில் டெங்கு உறுதிப்படுத்தப்பட்டது. டெங்கு உறுதிப் படுத்தப்பட்ட உரிமையாளர்களுக்கு சட்டநடவடிக்கை பதிவு செய்யப்பட்டது. இதுவரை சுமார் 50 இற்கு மேற்பட்டோருக்கு வழங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அப்பகுதிக்கு பொறுப்பான பொது சுகாதார உத்தியோகத்தர் தெரிவித்தார். குறித்த டெங்குத் தாக்கம் அதிகமாக உள்ள பகுதிகளுக்கு காலை மற்றும் மாலை வேளைகளில் டெங்கை கட் டுப்படுத்தும் மருந்துகள் மற்றும் புகை என்பன விசுறும் நடவடிக்கையும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.





# மலையக இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி கண்டியில்!

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பால் மாத்தறை, காலி, களுத்துறை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் பதுளை மாவட்டங்களைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மலையக இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவ மூன்று நாள் வதிவிடப் பயிற்சி ஒன்று கண்டியில் இடம்பெற்றது.

பிரச்சினைத் தீர்வுக்கான இளைஞர் தலைமைத்துவப் பயிற்சி என்ற தலைப்பில் இந்த மூன்று நாள் பயிற்சி கண்டி – திகணை, ஹொருத்தோட சாலேட் வளாகத்தில் நடைபெற்றது. இதில் இந்து, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த மலையக தமிழ் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சிக்கு பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் அன்டனி ஜேசுதாசன் வளவாளராக வழிகாட்டினார். திட்ட இயக்குநர் திருமதி லவினா ஹசந்தி, கணக்காளர் திருமதி மிதாரா பெரேரா, கள முகாமையாளர் அன்டன் வனத்தையா, மற்றும் களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செலவன். கே. சொகசுஜி ஆகியோர் பயிற்சியின் ஒருங்கிணைப்பு மற்றும் ஏற்பாட்டு செயற்பாடுகளில் முழுமையான ஆதரவை வழங்கியிருந்தனர்.

இந்தப் பயிற்சி மலையக சமூக வளர்ச்சியுடன் தொடர்புடைய இளைஞர் தலைமைத்துவம், சமாதானத்தை கட்டியெழுப்பல் மற்றும் நடைமுறை பிரச்சினைத் தீர்வுத் திறன்களை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. குழு விவாதங்கள், பாத்திரநடிப்பு, தியானம், காணொளிகள் மற்றும் அனுபவப் பகிர்வு போன்ற பங்கேற்பு முறைகளின் மூலம் தலைமைத்துவ மதிப்புகள், சுய விழிப்புணர்வு, நம்பிக்கை உருவாக்கம், நல்லிணக்கம் மற்றும் சமூகப் பொறுப்பு குறித்து இளைஞர்கள் ஆராய்ந்தனர்.

பங்கேற்ற இளைஞர்கள் ஒன்றிணைந்து மலையக சமூகம் எதிர்கொள்ளும் முக்கியமான சமூக, பொருளாதார மற்றும் உரிமை சார்ந்த சவால்களை அடையாளம் கண்டு, இளைஞர் தலைமையிலான தீர்வுகளை முன்மொழிந்தனர். அவை தொடர்புடைய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ள மாற்றுக் கொள்கை ஆவணத்துக்குப் பங்களித்தன என்று தெரிவிக்கப்பட்டது.






# ஐகோனிக் யூத்ஸ் அமைப்பால் அக்கரைப்பற்றில் சிரமதானம்

(றிஸ்வான் சாலிஹ்)

இலங்கையின் 78 ஆவது ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடு தழுவியரீதியாகமும்மதத்தினர்களுக்கும் உதவிக்கரம் நீட்டும் ஐகோனிக் யூத்ஸ் -ஸ்ரீலங்கா அமைப்பின் அக்கரைப்பற்று கிளையால் ஏற்பாடு செய்யப்பட்ட "நாம் தானே அழுக்காக்கினோம் நாமே அழ காக்குவோம்" எனும் தொனிப்பொருளி லான கடற்கரை சிரமதான நிகழ்வு நேற்று புதன்கிழமை அக்கரைப்பற்று கடற்கரையில் நடைபெற்றது.

ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக இந்தப் பாரிய பணியை இவர்கள் மேற் கொண்டு வருகின்றனர்.

இதன்போது கடற்கரையோரத்தில் காணப்பட்ட பிளாஸ்டிக் போத்தல்கள், லன்சீட், உணவுப் கழிவுகள் உட்பட ஏனைய கழிவுப் பொருள்களையும் சேகரித்து எரியூட்டியதோடு, இவ்வாறான மனிதர்களுக்கு இடையூறு தரக்கூடிய பொருள்களை கடற்கரையில் வீச வேண்டாம் என்றும் இவ்வமைப்பின் தவிசாளர் சிமாம் முஸ்தாக் அங்கு தெரி வித்தார்.

இந்தச் சிரமதானப் பணியில் அமைப்பின் அங்கத்தவர்கள், தொண்டர் கள், இந்தப் பிராந்திய நலன்விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# காரைதீவு சர்வ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஆரம்பம்!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு வைத்தியசாலையில் புதிதாக அமையப் பெற்றுள்ள சர்வ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷே கம் நாளை வெள்ளிக்கிழமை கர்மாரம் பத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மகா கும்பாபிசேகம் நடைபெறவுள்ளது.

அதேவேளை நாளை மறுதினம் எண்ணெய்க்காப்பு இடம்பெறும்.

கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தலை மையில் கும்பாபிஷேகம் நிறைவடைந்த பின்னர் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை மண்டலாபிசேக பூசைகள் இடம்பெறும்.






# சாய்ந்தமருதில் ‘நினைவுச் சுவடுகள்’ விழா!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வும், 2025 சாதாரண தரப் பரீட்சை மாணவர்களுக்கான விடுகை விழாவுமான “நினைவுச் சுவடுகள்” பாடசாலை அதிபர் எம்.சி. நஸ்லின் ரிப்ஹா அன்சார் தலைமையில் நேற்று புதன்கிழமை நடைபெற்றன.

நிகழ்வில் தேசியக் கொடி ஏற்றப்பட்டதுடன், தேசிய கீதம் இசைக்கப்பட்டு சுதந்திர தினத்துக்கு உரிய மரியாதை செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சுதந்திர தின நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து சுதந்திர தினமும் சாதாரண தர மாணவர்களின் விடுகை விழாவும் நடைபெற்றன.

பிரதம அதிதியாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்றிட்ட பொறியியலாளர் எந்திரி எம்.ஐ.எம். றியாஸ், கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட பிரதிக்கல்வி பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளருமான திருமதி அஸ்மா அப்துல் மலிக் ஆகியோர் கலந்து கொண்டனர்.








# கற்பிட்டி ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வுகள்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியில் இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் கல்லூரியின் அதிபர் எம். ஏ. பீ. எம். முபாஸில் (உஸ்மானி) தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் எம். ஐ. எம். இபாதத்துல்லாஹ் மற்றும் கல்லூரியின் உஸ்தாந்மார்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம் பெண்கள் அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் அதன் உறுப்பினர்களான பெண் சுயதொழில் முயற்சியாளர்களான உள்ளூர் உற்பத்தி முயற்சியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் விசேட கண்காட்சி கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்த விற்பனைக் கண்காட்சி நிகழ்வில் மாநகர முதல்வர் வி.மதிவதனி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்த விற்பனைக் கூடங்களை பார்வையிட்டதுடன், அவர்களின் உற்பத்தி முயற்சிகள், தற்போதைய நிலமைகள் தொடர்பிலும் கேட்டு அறிந்து கொண்டார்.

விற்பனைக் கூடங்களைப் பார்வையிட்ட பின்னர் முதல்வர் கருத்து வெளியிடுகையில், உள்ளூர் உற்பத்தி முயற்சியாளர்களை மேலும் ஊக்குவிக்க வேண்டும். யாழ். பெண்கள் அபிவிருத்தி மையம் இது போன்று மேலும் பலருக்கும் இவ்வாறான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாநகரசபை முடியுமான ஒத்துழைப்புக்களை பெண், சுயதொழில் முயற்சியாளர்களுக்கு வழமை போன்று வழங்கும் என்று குறிப்பிட்டார்.

இந்தக் கண்காட்சி நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்களான என்.எம். அப்துல்லாஹ், ஆர்.எப்.றிஸ்லா, யாழ். பெண்கள் அபிவிருத்தி மையத்தின் தலைவி என்.சியானா, அமைப்பின் உறுப்பினர்கள், பெண்கள், தொழில் முயற்சியாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# ‘ஆரோக்கியமான வாழ்வை நோக்கி’ யாழ். மருத்துவ பீடத்தில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணத்தில் “ஆரோக்கியமான வாழ்வை நோக்கி” விழிப்புணர்வு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையமும், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சமூக மற்றும் குடும்ப நல மருத்துவத் துறையும் இணைந்து இந்த நிகழ்வு நாளை மறுதினம் மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட கூவர் அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக அமெரிக்காவின் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவன அமைப்பைச் சேர்ந்த வைத்திய கலாநிதி காருண்யன் அருளானந்தம் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் எம். பிரதீபன் பங்கேற்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் ஆர். சுரேந்திரகுமாரன், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி சத்தியமூர்த்தி, வடமாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம். உமா சங்கர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பின் அனுசரணையுடன் நடைபெறும் இந்த ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்வுக்கு ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.



# கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற இலங்கையின் சுதந்திர தின நிகழ்வு

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

கிழக்கு மாகாணத்தில் இலங்கையின் 78 ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்டங்கள் நேற்று திருகோணமலை கடற்கரையில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், இந்த ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டங்கள் “இலங்கையை கட்டியெழுப்புவோம்” என்ற கருப்பொருளில் கொண்டாடப்படுகின்றன. இந்த ஆண்டு டித்வா சூறாவளிக்குப் பிறகு நாடு அதிகபட்ச பலத்துடன் மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்று கூறினார்.

கடந்த காலங்களில் மிகவும் கடினமான காலங்களில் எழுச்சி பெற்ற இலங்கை மக்கள், இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றிணைந்து நாட்டை வளர்ச்சி நோக்கி இட்டுச் செல்ல முடியும். மக்கள், அரச இயந்திரங்கள் மற்றும் அரச அதிகாரிகள் நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணைந்து பணியாற்றக்கூடிய ஒரு சகாப்தம் உருவாகியுள்ளது. மேலும் நாட்டை ஒன்றாக கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியமும் வெளிப்படுத்தப்பட்டது என்றார்.

இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர், திருகோணமலை மாவட்ட செயலாளர், மாகாண சபை அதிகாரிகள், முப்படை அதிகாரிகள், சர்வமத தலைவர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.











# மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்)

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் தேசிய கொடி ஏற்றிவைக்கத் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர் தியாகம் செய்த வீரர்களை நினைவு கூறும் வகையில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து அரச அதிபரால் சுதந்திர தின உரை நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து மர நடுகை இடம்பெற்றது.

நிகழ்வில் உதவி மற்றும் மேலதிக அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.








# கவரவலை தோட்டத் தொழிலாளர்கள் இன்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில்!

(மஸ்கெலியா நிருபர்)

சாமி மலை பகுதியில் உள்ள கவரவலை தோட்டத்தில் தோட்ட முகாமையாளரால் பணி நிறுத்தம் செய்யப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் எட்டு பேர் தோட்ட நிர்வாகத்துக்கு எதிராகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று சாமி மலை பகுதியில் உள்ள ஹொரணை தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் கவரவலை தேயிலைத் தோட்டத்தைச் சேர்ந்த எட்டு தோட்டத் தொழிலாளர்கள் தோட்டத்தில் அமைந் துள்ள இந்து கோவிலுக்கு முன்பாக சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினர்.

கவரவலை தேயிலைத் தோட்ட நிர்வாகத்தால் தாங்கள் சேவைகள் இடைநிறுத்தப்பட்டதற்கு எதிராகவும், நிலுவைத் தொகையுடன் தோட்ட நிர்வாகம் தங்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்று கோரியும் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

எட்டு தோட்டத் தொழிலாளர்களின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டு 48 நாள்கள் கடந்துவிட்டதாக சத்தியாக்கிரகத்தில் பங்கேற்ற தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இடைநீக்கம் செய்யப்பட்ட நாள்களுக்கான சம்பளத்துடன் தங்கள் சேவைகளை உடனடியாக மீண்டும் வழங்குமாறு தோட்ட நிர்வாகத்தை வலியுறுத்தி இந்த சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியுள்ளனர் என்று சத்தியாக்கிரகத்தில் பங்கேற்ற தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்





# கல்கமுவ மதகம பிரதேசத்தில் 3 வாகனங்கள் மோதி விபத்து!

(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

பாதெனிய – அநுராதபுர வீதியில் கல்கமுவ மதகம பிரதேசத்தில் மூன்று வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

கார் ஒன்றின் சாரதி தூங்கிய நிலையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் முன்னே வந்த இராணுவத்துக்குச் சொந்தமான லொறியுடன் மோதியது.

இந்த நிலையில் அதற்குப் பின்னால் வந்த காரும் இவற்றுடன் மோதியது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் காரின் முன் பகுதி பலத்த சேதமடைந்தது. அநுராதபுர பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.






### உழவு இயந்திரங்களைப் பயன்படுத்த அனுமதிக்கக் கோரி

# வாகரை மீனவர் அமைப்புகள் இன்று கவனவீர்ப்பு போராட்டம்

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கடற்தொழில் முன்னெடுப்போர் மட்டக்களப்பு கடற்தொழில் நீரியல்வள திணைக்களத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வாகரை பிரதேசத்தில் உள்ள மீனவர் அமைப்புகள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

வாகரை பகுதியில் கரைவலை மீன்பிடியில் ஈடுபடுவோர் மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள வாவிக்கரை வீதியால் ஊர்வலமாகச் சென்று கடற்தொழில் நீரியல்வள திணைக்களத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக கரை வலை மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களே இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாங்கள் நீண்டகாலமாக கடல்தொழிலில் ஈடுபட்டுவருவதுடன் உழவு இயந்திரங்களை பயன்படுத்தி வந்துள்ளனர் என்றும் தற்போது உழவு இயந்திரங்களை பயன்படுத்தி கரைவலை இழுப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதால் மீனவர்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

உழவு இயந்திரம் மூலம் வலைகள் இழுப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக மீனவர்களின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மீனவர்களின் குடும்பங்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு கடற்தொழில் நீரியல்வள திணைக்கள உதவி பணிப்பாளர் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு வருகைதந்து போராட்டத்தில் கலந்துகொண்டவர்களுடன் கலந்துரையாடினார். அவரிடம் மகஜர் ஒன்று இதன்போது மீனர்களால் கையளிக்கப்பட்டது.

மீனவர் அமைப்பால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை உரிய திணைக்களத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு சென்று அதற்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று இதன்போது மட்டக்களப்பு கடற்தொழில் நீரியல்வள திணைக்கள உதவி பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.











# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் காணி அளிப்புப் பத்திரம் வழங்கும் நிகழ்வு

(எம்.எப்.எம்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அரச காணிகளில் நீண்ட காலமாக குடியிருந்தும், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருவோருக்கு அந்தக் காணிகளுக்கான காணி அளிப்புப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பத்திரங்கள் 20 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி. அஹமட் அப்கர் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கணக்காளர் எம். எப். பர்ஹான், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர் நிர்வாக உத்தியோகத்தர், கே வி. சலீம், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம். ஐ. எம். அஸ்வர், காணி உத்தியோகத்தர் எம். ஐ. எம். றியாத், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ. எம். சுரையா, விடய உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# தொகுதி எண்ணிக்கை குறித்து காங்கிரஸுடன் பேசவில்லை

## கனிமொழி தகவல்



காங்கிரஸுடன் தொகுதி எண்ணிக்கை குறித்து பேசவில்லை என்று கனிமொழி எம்.பி. தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் சில மாதங்களில் நடைபெற உள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகளை தி.மு.க. முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது. தேர்தல் அறிக்கை தயாரிக்க கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்பி தலைமையில் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு தரப்பினரின் கருத்துகளைக் கேட்டறிந்து வருகிறது.

அதன்படி தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் கருத்துக் கேட்புக் கூட்டம் சென்னை அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது. இதில் குழுவின் தலைவர் கனிமொழி எம்பி மற்றும் இதர உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில், தமிழ்நாடு அருந்ததியர் முன்னேற்றப் பேரவை, ஆதி திராவிடர் மகாஜனசபை, அனைத்து முதலியார் வேளார் சங்கங்களின் பேரவை, இளைஞர் படுகர் சங்கம், மக்கள் மறுமலர்ச்சி கழகம், தமிழ் நாடு வீரபாண்டிய கட்டபொம்மன் பண்பாட்டுக் கழகம் உள்ளிட்ட சமுதாய பிரதிநிதிகள், வணிகர்கள், மீனவர்கள், பொதுமக்கள் என பலரும் தங்கள் கோரிக்கைகளையும், மனுக்களையும் அளித்தனர்.

இந்த கூட்டத்தில் கனிமொழி பேசுகையில்,

"சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக மண்டலந்தோறும் சென்று அனைத்து தரப்பையும் சந்தித்து கருத்துகளை கேட்டறிந்து வருகிறோம். இதன்மூலம் தி.மு.க. தேர்தல் அறிக்கையை மக்களின் தேர்தல் அறிக்கையாக உருவாக்கும் பணிகளை செய்து வருகிறோம். தி.மு.க. தேர்தல் அறிக்கை மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும்." - என்றார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"முதல்வரின் அறிவுரையின்படி பல்வேறு அமைப்புகளின் கருத்துகளை கேட்டறிந்து தேர்தல் அறிக்கை உருவாக்கப்பட உள்ளது. அதன்படி சென்னையில் இன்று (நேற்று) சமூக அமைப்புகள், கல்வியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துகளை கேட்டோம். அதில் எதையெல்லாம் தேர்தல் அறிக்கையில் இணைத்துக் கொள்ளலாம் என்று பரிசீலனை செய்து முதல்வரிடம் அனுமதி பெற்று தேர்தல் அறிக்கையாக விரைவில் வெளியிடப்படும்.

அதேபோல், காங்கிரஸ் உள்ளிட்ட தோழமைக் கட்சிகளுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. தொகுதி எண்ணிக்கை குறித்து எதுவும் பேசவில்லை. தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை குழுதான் முடிவு செய்யும். நாடாளுமன்றத்தில் எம்.பிக்கள் இடைநீக்கம் செய்ததை ஏற்க முடியாது. மேலும். கூட்டணிக்கு புதிய கட்சிகள் வந்தால் முதல்வர் அறிவிப்பார்." என்று தெரிவித்துள்ளார்.

# இண்டியா கூட்டணியில் பிளவு ஏற்பட்டுள்ளது

## நிர்மலா சீதாராமன் விமர்சனம்

தமிழகத்தில் இண்டியா கூட்டணியில் பிளவு ஏற்பட்டுள்ளது எனவும் காங்கிரஸ் கட்சி இன்னும் ஊசலாட்டத்தில் இருக்கிறது என்றும் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விமர்சித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழக அரசியலில் நடிகர் விஜய்யின் வருகை தேர்தல் களத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. அவருக்கு எந்தளவுக்கு செல்வாக்கு இருக்கும் என்பதை தேர்தல் முடிவுகளே தீர்மானிக்கும். இருப்பினும், விஜய்யின் வருகை தி.மு.கவை கலக்கமடையச் செய்துள்ளது என்பது வெளிப்படை.

தமிழகத்தில் போதைப்பொருள் பழக்கம், பட்டியலினத்தவர் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளன. பல்கலைக்கழக வளாகங்கள் பாதுகாப்பற்ற இடங்களாக மாறி வருகின்றன. சமூக நீதி



பேசும் திமுக அரசு, இந்தக் குற்றங்களைத் தடுக்கத் தவறிவிட்டது. போதைப்பொருள் மாஃபியாக்களுக்கும், அதிகார மட்டத்தில் இருப்பவர்களுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுப்பப்படும் கேள்விகளுக்கு இது வரை விடை கிடைக்கவில்லை.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு கேள்விக்குறியாக தொடர்கிறது. 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சியில் இல்லாத ஒரு தேசியக் கட்சி இப்போதும் கூட்டணியை மட்டுமே நம்பி இருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், திமுகவுடன் தொடர்வதா அல்லது தனித்துப் போட்டியிடுவதா என்பதில் காங்கிரஸிடம் தெளிவில்லை.

ஐந்து ஆண்டுகள் ஒன்றாகத் தேர்தலைச் சந்தித்தவர்கள், இப்போது ஏன் தயக்கம் காட்டுகிறார்கள். இது இண்டியா கூட்டணி இன்னும் வலுவாக உள்ளதா என்ற ஐயத்தை எழுப்பியுள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

விஜய்யுடன் பா.ஜ.க. கூட்டணி வைக்குமா என்ற கேள்விக்கு,

"கூட்டணிக்கு யார் வந்தாலும் வரவேற்போம். அதே சமயம், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மிகவும் ஒற்றுமையுடன் இலக்கை நோக்கி துரிதமாக முன்னேறி வருகிறது." என்று கூறினார்.




# இந்தியாவுக்கு முழு சுதந்திரம் உள்ளது; எண்ணெய் விவகாரத்தில் ரஷ்யா கருத்து


உலக நாடுகளில் எங்கிருந்து வேண்டுமானாலும் தங்களுக்கு தேவையான கச்சா எண்ணெயை இந்தியா பெறுவதற்கான முழு சுதந்திரம் உள்ளது என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டுள் ளது.

இந்நிலையில், இந்தியா இனி ரஷ்ய கச்சா எண்ணெயை வாங்காது என அமெரிக்க தரப்பு தெரிவித்து வருகிறது. இத்தகைய சூழலில் இந்த விவகாரம் தொடர்பாக நேற்று புதன்கிழமை ரஷ்ய செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கருத்து தெரிவிக்கையில்,

“இந்தியாவுக்கு தேவையான கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியம் பொருட்களை ரஷ்யா மட்டுமே தனியொரு தேசமாக விநியோகிக்கவில்லை. இதை ரஷ்யா உட்பட உலக அளவில் எண்ணெய் வளம் மிக்க சர்வதேச நாடுகள் நன்கு அறியும்.

ஏனெனில் இந்தியா பல்வேறு நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் வாங்கி வருகிறது. அதனால் இதில் புதிது எதுவும் இல்லை என நாங்கள் பார்க்கிறோம். உலக நாடுகளில் எங்கிருந்து வேண்டுமானாலும் தங்களுக்கு தேவையான கச்சா எண்ணெயை இந்தியா பெறுவதற்கான முழு சுதந்திரம் உள்ளது.” என்று அவர் தெரிவித்தார்.



# டில்லியில் 15 நாள்களில் 807 பேரை காணவில்லை

இந்தியாவின் புதுடில்லியில், கடந்த ஜனவரி மாதத்தின் முதல் 15 நாள்களில் மாத்திரம் 807 பேர் காணாமல் போயுள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள் என்பதுடன், சராசரியாக நாளொன்றுக்கு 54 பேர் காணாமல் போயுள்ளமை தெரியவந்துள்ளது.

டில்லியில் பொலிஸ் தரப்பிலிருந்து வெளியாகியுள்ள புள்ளிவிபரத்தில், இந்த விடயம் தெரியவந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, டில்லியில் ஜனவரி முதலாம் திகதி முதல் 15ஆம் திகதி வரையாக முதல் 15 நாள்களில் மாத்திரம் 509 பெண்கள் மற்றும் சிறுமிகள் உட்பட 809 பேர் காணமல் போயுள்ளனர்.

அதில் 146 சிறுமிகளும் 45 சிறுவர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், 616 பேர் காணாமல் போயுள்ளனர் என வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனினும், அதில் 181 பேர் மாத்திரமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என ஏனைய 435 பேரைத் தேடும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த பல ஆண்டுகளாக 2.3 லட்சம் பேர் காணாமல் போயுள்ளதால், சிறுவர்கள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனா - ரஷ்யா ஜனாதிபதிகள் காணொலி அழைப்பில் பேச்சு



சீனா மற்றும் ரஷ்ய ஜனாதிபதிகள் காணொலி அழைப்பு ஊடாக பேச்சு நடத்தியுள்ளனர். ரஷ்யாவுக்கு ஆதரவளிப்பதை சீனா நிறுத்த வேண்டும் என ஐரோப் பிய நாடுகளின் தலைவர்கள் வலியு றுத்தி வருகின்றனர். ஆனால், சீனா, ரஷ்யாவுடன் தொடர்ந்து வர்த்தகம் செய்து வந்தது.

இதனால் மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவுக்கு பொருளாதார தடைவிதித்தும், எந்த பலனும் இல்லை. தற்போது ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் சீனாவுடன் உறவை மேம்படுத்தி வருகின்றனர். இங்கிலாந்து மற்றும் கனடா பிரதமர்கள் சீனாவுக்கு கடந்த மாதம் சென்றனர். ஜெர்மன் ஜனாதிபதியும் இந்த மாதம் சீனா செல்லவுள்ளார்.

இந்நிலையில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும், ரஷ்ய ஜனாதிபதி புடினும் நேற்று காணொலி அழைப்பில் பேசினர். ரஷ்யா- உக்ரைன் இடையேயான போர் தொடர்பாக சீனாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்பதை உறுதி செய்வதற்காக இவர்கள் பேசியிருக்கலாம் என கூறப்படுகிறது.

ரஷ்ய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் செர்கே சோய்கு, கடந்த வாரம் பீஜிங் சென்று, சீன வெளியுறவுத்துறை அதிகாரி வாங்க் யீயை சந்தித்தார். உலகளவில் நிச்சயமற்ற சூழல் நிலவும் நிலையில், இரு நாடுகளும் நெருங்கிய உறவை பராமரிக்க அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

# ரஷ்ய கச்சா எண்ணெயை இந்தியா வாங்காது: வெள்ளை மாளிகை ஊடகச் செயலர் தகவல்

இந்தியப் பொருள்களுக்கான இறக்குமதி வரி 18 சதவீதமாக குறைக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அமெரிக்க வெள்ளை மாளிகை ஊடகச் செயலர் கரோலின் லீவிட் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"இந்தியா, அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது. இதை ஒரு மிகப்பெரிய வெற்றியாக அமெரிக்கா பார்க்கிறது. இதைத் தொடர்ந்து ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெயை வாங்குவதில்லை என இந்தியா உறுதி அளித்துள்ளது.



மேலும், அமெரிக்கா, வெனிசுலா நாடுகளிடமிருந்து இனி கச்சா எண்ணெயை இந்தியா வாங்கும். ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்படும் கச்சா எண்ணெயை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல் அமெரிக்க பொருள்களை இறக்குமதி செய்யும் எண்ணிக்கையை அதிகரிக்கவும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது. வெனிசுலாவிடம் இருந்தும் இந்தியா, கச்சா எண்ணெயை வாங்க முடியும். இதனால் அமெரிக்க பொருளாதாரம் மேலும் பலன் அடையும்.

இந்தியாவுடன் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தத்தை ஜனாதிபதி ட்ரம்ப் இறுதி செய்துள்ளார். இதற்காக இந்தியப் பிரதமர் மோடியுடன் அவர் நேரடியாகவே பேசி உள்ளார். மேலும், அமெரிக்க எரிசக்தி, போக்குவரத்து மற்றும் விவசாயப் பொருள்களை வாங்குவதற்காக இந்தியா 500 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவுக்கு செலவிடவுள்ளது." என்று தெரிவித்தார்.

# ட்ரம்பைக் கொலைசெய்ய முயன்ற ராயன் ரௌத்திற்கு ஆயுள் தண்டனை



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைக் கொலை செய்ய முயன்ற வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட 59 வயதான ராயன் ரௌத்திற்கு ஆயுள் தண்டனை விதித்து புளோரிடா நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் திகதி, புளோரிடாவின் வெஸ்ட் பாம் பீச்சில் உள்ள ட்ரம்பிற்குச் சொந்தமான கொல்ஃப் மைதானத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

டொனால்ட் ட்ரம்ப் கொல்ஃப் விளையாடிக் கொண்டிருந்தபோது, அங்கிருந்த புதர்களுக்குள் துப்பாக்கியுடன் பதுங்கியிருந்த ராயன் ரௌத்தை அமெரிக்க இரகசிய சேவை அதிகாரிகள் கண்டறிந்தனர்.

அதிகாரிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையடுத்து, அவர் அங்கிருந்து தப்பிச் சென்றார்.

பின்னர், சிவில் சாட்சி ஒருவரின் உதவியுடன் அவரது வாகன இலக்கத்தை வைத்து பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

இந்த வழக்கில், ராயன் ரௌத்தின் செயல் "முன்கூட்டியே திட்டமிடப்பட்ட மற்றும் தீய எண்ணம் கொண்டது" எனக் குறிப்பிட்டு, அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து புளோரிடா நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கனடா முரசு

வியாழக்கிழமை | 05/02/2026

## ஒன்டாரியோவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 10 பேர் காயம்



02



# தற்காலிக விசாவில் வருகை தந்தவர்கள் கனடாவிலிருந்து வெளியேற வேண்டும்

## அமைச்சர் லெனா மெட்லெஜ் தியாப் தெரிவிப்பு

கனடாவிற்கு தற்காலிக விசாவில் வருகை தந்தவர்கள், அதன் காலம் முடிவடைந்ததுடன் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என கனேடிய குடிவரவுத் துறை அமைச்சர் லெனா மெட்லெஜ் தியாப் தெரிவித்துள்ளார்.

அதன்படி தற்காலிக விசாக்களில் கனடாவுக்குள் வருபவர்கள் வெளியேறுவதைக் கண்காணிக்க டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஒரு நபர் நாட்டை விட்டு வெளியேறும் போது அவரது விவரங்களை எல்லைப் பாதுகாப்பு முகவரகம் பதிவு செய்கிறது.

02

# கியூபாவுக்கு பயண எச்சரிக்கை; புதுப்பித்தது கனடா அரசாங்கம்



கியூபாவில் மின்சாரம், எரிபொருள் மற்றும் அடிப்படை தேவைகள் கடுமையாக தட்டுப்படுகின்ற நிலையில், அந்த நாட்டிற்கு பயணம் செய்யும் கனடியர்கள் அதிக அளவிலான எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என கனடா அரசு தனது பயண அறிவுறுத்தலை புதுப்பித்துள்ளது.

இந்த தட்டுப்பாடுகள் சுற்றுலா விடுதிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

“நிலைமை கணிக்க முடியாததாக உள்ளது. குறுகிய கால அறிவிப்பில் விமான சேவைகள் பாதிக்கப்படக்கூடும்,” என பயண அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சார வலையமைப்பின் மீது ஏற்படும் அழுத்தத்தை குறைப்பதற் 02




# ஒன்டாரியோவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 10 பேர் காயம்

கனடாவில் இடம்பெற்ற பஸ் விபத்துச் சம்பவத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

ஒன்டாரியோ மாகாணம் பிராம்டன் நகரின் மையப் பகுதியில் இடம்பெற்ற பல வாகனங்கள் மோதிய விபத்தில், அரசுப் போக்குவரத்து பஸ்ஸும் தொடர்புபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 10 பேர் சிறிய காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவசர மருத்துவ சேவைகள் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபத்து குயின் ஸ்ட்ரீட் ஈஸ்ட் மற்றும் ஹான்சன் ரோடு நார்த் சந்திப்பில், கென்னடி ரோடு சவுத் பகுதியை ஒட்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பான தகவல்கள் கிடைத்ததைத் தொடர்ந்து பீல் பிராந்திய பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பிராம்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அணியினரும் சம்பவ இடத்தில் மீட்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



## கியூபாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக, கியூபா அரசு தினசரி நீண்ட நேர மின்தடை அட்டவணைகளை அமுல்படுத்தி வருகிறது.

இருப்பினும், எதிர்பாராத நாடளாவிய மின்தடைகள் ஏற்படக்கூடும் என்றும், அவை 24 மணி நேரத்திற்கும் மேலாக நீடிக்கலாம் என்றும் ஒட்டாவா எச்சரித்துள்ளது.

மேலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கியுபா முழுவதும் பயணம் செய்வது மிகவும் கடினமாகியுள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவைகள் அடிக்கடி பாதிக்கப்படுவதுடன், சில பயணிகள் வாடகை வாகனங்களுடன் தற்காலிகமாக சிக்கித் தவித்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசைகள் காரணமாக மோதல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அறிவுறுத்தலில் கூறப்பட்டுள்ளது.

கியூபாவில் தற்போது உள்ள கனடியர்கள், உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும் என்றும், அவசர நிலைகளில் உடனடியாக தொடர்பு கொள்ள வசதியாக Registration of Canadians Abroad சேவையில் பதிவு செய்ய வேண்டும் என்றும் கனடா அரசு அறிவுறுத்தியுள்ளது.

## தற்காலிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


எனினும் விசா காலம் முடிந்ததால் குறிப்பிட்ட நபர் வெளியேறுகிறாரா என்பதைத் தானாகக் கண்டறியும் வசதி இல்லை என கனேடிய குடிவரவுத் துறை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை சாதாரண நடைமுறையின் மூலம் சரிபார்க்க அதிக நேரம் எடுப்பதால், அதனை மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2026ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 1.9 மில்லியன் தற்காலிக விசாக்கள் காலாவதியாகவுள்ளன என கனேடிய குடிவரவுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேசமயம் விசிட்டர் விசா உட்பட பல விசாக்களில் பல தமிழர்கள் கனடா சென்றுள்ள நிலையில், அவர்களுக்கும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கனேடியர்களை நேசிக்கிறேன்: செய்தி அனுப்பினார் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்ப், சமீபத்தில் அமெரிக்காவுக்குச் சென்ற கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மூலமாக கனேடியர்களுக்கு செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

கனடாவின் கன்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஜமில் ஜிவானி, சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்தார்.

கனடா அமெரிக்க உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் தனிப்பட்ட முறையில் அவர் அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கனேடிய மக்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி தன்னிடம் ஒரு செய்தியைக் கொடுத்ததார் என தெரி வித்துள்ளார் ஜிவானி.

அது குறித்து சமூக ஊடகமான எக்ஸில் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ள ஜிவானி, "வெள்ளை மாளிகை மற்றும் மாகாணத் துறையுடன் பயனுள்ள சந்திப்புகள் நிகழ்ந்தன.

அமெரிக்க ஜனாதிபதி என்னிடம் ஒரு செய்தியைக் கொடுத்து அதை கனேடிய மக்களுக்குக் கொடுக்குமாறு கூறினார்'.

"நான் கனேடியர்களை நேசிக்கிறேன் என்று அவர்களிடம் கூறுங்கள், பிறகு நான் அவர்களிடம் பேச நிறைய விடயங்கள் உள்ளன." என்று ட்ரம்ப் தன்னிடம் கூறினார் என ஜிவானி தெரிவித்துள்ளார்.

ஜிவானி, அமெரிக்க துணை ஜனாதிபதியான ஜே.டி. வேன்ஸின் நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்ட 7 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது

பொலிஸார் திட்டமிட்ட குற்றச் செயல்கள் ஈடுபட்டுள்ளமை கனடா முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டொராண்டோ பொலிஸ் சேவையில் பணியாற்றிய 7 பொலிஸ் உத்தியோகத்தர்கள் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் ஊழல் தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டு குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

யோர்க் பிராந்திய பொலிஸார் முன்னெடுத்த நீண்டகால ரகசிய விசாரணையின் பின்னணியில் இந்த கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டத்தை அமல்படுத்த வேண்டியவர்களே சட்டத்தை மீறியதாகக் கூறப்படும் இந்த சம்பவம், பொலிஸ் அமைப்பின் நம்பகத்தன்மையை கடுமையாக கேள்விக்குறியாக்கியுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் உடனடியாக சம்பளமின்றி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் டொராண்டோ பொலிஸின் 11 மற்றும் 12 பிரிவுகள் மற்றும்




துப்பாக்கி மற்றும் வன்முறைக் கும்பல் போன்ற முக்கியப் பிரிவுகளில் பணியாற்றியவர்கள் என்பதும் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விசாரணையில் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் உத்தியோகத்தர்களில் இருவரின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

டிம் பார்ன்ஹார்ட் (12வது பிரிவு) மற்றும் ராப் பிளாக் ஆகியோரின் பெயர்களே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சட்ட அமலாக்க அமைப்புகள் மீது வைத்திருந்த நம்பிக்கையை குலைக்கும் இந்த சம்பவம், கனடாவில் பொலிஸ் துறையின் உள்ளக கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான விவாதங்களை மேலும் தீவிரப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.